Liberté • Égalité • Fraternité
RÉPUBLIQUE FRANÇAISE
MINISTÈRE DES SOLIDARITÉS ET DE LA SANTÉ

# நான் நோயாளியாக இருக்கின்றேன்

## என்னை குணப்படுத்த நான் போகலாம்

எனக்கு அருகாமையில் உள்ள வைத்தியர்களினதும் வைத்திய நிறுவனங்களினதும் பட்டியலை http://annuairesante.ameli.fr என்னும் இணையத்தளத்தில்

அவசர நிலைமையில் 15 அல்லது 112 என்னும் இலக்கத்திற்கு தொலைபேசி அழைத்தால் உங்களது

### வைத்தியசாலைக்கு அப்பால் ஒரு வைத்தியரிடம்

எந்தவொரு வைத்திய தேவைகட்கும் ஒரு சாதாரண வைத்தியரை நாடலாம். அவர் உங்களை பரிசோதித்தபின் உங்களுக்கு தேவையான மருந்துகளை பரிந்துரைப்பார். உங்களுக்கு மேலதிக பரிசோதனைகளும் சிகிச்சைகளும் தேவைப்படின், அவர் உங்களை சிறப்பு வைத்தியரிடம் அல்லது மருத்துவ உதவியாளரிடம் (மருத்துவ தாதி, உடற்பயிற்சி நிபுணர்) தங்களை அனுப்பி வைப்பார்.

### மருந்தகம்

வைத்தியரினால் அல்லது வைத்தியசாலையினால் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை வாங்குவதற்கு.
ஆலோசனைகளை பெறுவதற்கு

பணம் செலுத்தும் சிகிச்சைகளுக்கான செலவுகள் உங்களது வைத்திய காப்புறுதியினால் போறுப்பேற்கப்படலாம். மேற்கொள்ளவேண்டிய நடைமுறைகளுக்கு இரண்டாம் பக்கத்தையும் விண்ணப்பம் செய்வதற்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களையும் பார்க்கவும்

### வைத்தியசாலை

**அவசர தேவைகட்கு**
குறிப்பிட்ட சில பரிசோதனைகட்கு அல்லது சிறப்பு வைத்தியரை தொடர்பு கொள்வதற்கு: நேர நியமனம் மூலம்.

### தங்களது நிலைலம எதுவாக இருந்தாலும் இலவசமக சிகிச்லச பெறுந் இடங்கள்.

- சிகிச்சைகளுக்காண நிரந் அணுகுமுசந நிசலையங்கள் (PASS)
- கர்ப்பிணி பெண்களுக்கும் ஆறு வயதுக்குட்பட் குழந்தைகட்கும்: PMI நிறுவனம்
- காச நோய்க்கு: காசநோய் கட்டுப்பரடு நிறுவனம் (CLAT)
- எயிட்ஸ் (VIH) அன்னது கன்லீரல் நோய், பாலியல் உறவு மூலம் தோற்றும் நோய்கள் பரிதகோனைகளுக்கு: CeGIDD
- கருத்தடை வழிமுறைகனை பெற்றுகொள்வதற் கு: குடும்ப திட்டமிடல் நிறுவனம் (CPEF)
- போதை அடிமைக்கு: CARRUD, CSAPA
- சிறப்பு நிறுவனங்கள்

## தெரிந்துகொள்ளவேண்டியவை

பாரபட்சமற்ற தன்மையும் மருத்துவ இரகசியமும்.
மருத்துவ துறை சார்ந்தவர்கள் (வைத்தியர்கள், தாதிகள், பல் வைத்தியர்கள் மற்றும்) உங்களது தோற்றத்தின் அடிப்படையில் உங்களுக்கு சிகிச்சை வழங்க மறுக்க முடியாது. அத்துடன் அவர்கள் உங்களது உடல் நிலை தொடர்பான தவல்களை அரச நிர்வாகம் உட்பட வேறு நபர்களுக்கு வழங்க முடியாது.

குடும்ப வைத்தியர்
சிறந்த முறையில் சிகிச்சை பெறுவதற்கும் அதற்கான செலவை மீள பெற்றுக்கொள்வதற்கும் நீங்கள் ஒரு வைத்தியரை தெரிவு செய்ய வேண்டும். அவர் உங்களது சிகிச்சைகளை தொடர்வதற்கு பொறுப்பாகவிருப்பார். அவருடனான முதல் சந்திப்பின் போதே அது தொடர்பாக அவருடன் பேசவும்.

பூரணமான தவல்கள் பெறப்படாத நிலைமையிலும் உங்களுக்கு அனுமதி வழங்கப்படாத நிலையிலும், எந்தவொரு வைத்திய செயற்பாடுகளையோ சிகிச்சைகளையோ மேற்கொள்ள கூடாது

Liberté • Égalité • Fraternité
RÉPUBLIQUE FRANÇAISE

MINISTÈRE DES SOLIDARITÉS ET DE LA SANTÉ

# உங்களது வைத்தியங்ளை பொறுப்பேற்று கொள்வதற்கு மருத்துவ காப்புறுதியை பெற்றுகொள்வது எவ்வாறு?

பிரான்சில் மருத்துவ சேவைகட்கு பணம் செலுத்த வேண்டும். இருந்தபோதிலும் உங்களது மருத்துவ செலவுகளின் ஒரு பகுதியை அல்லது முழுவதையும் பொறுப்பேற்கும் மருத்துவ காப்புறுதியை உங்களது நிலைமைகேற்ற வகையில் பெற்று கொள்ளலாம். இது தொடர்பான தகவல்களையும் விண்ணப்ப படிவத்தையும் முதன்மை வைத்திய காப்புறுதி நிலையத்தில் (CPAM) பெற்றுக்கொள்ளலாம். அல்லது 3646 (கட்டணம் செலுத்தும்) எனும் தொலைபேசி இலக்கத்தில் அல்லது www.ameli.fr, www.cmu.fr இணைய தளங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

## முக்கியமானது

- ✓ **உங்களது குழந்தைகளுக்கு சிகிச்சை தேவைப்பட்டால்:** மருத்துவ காப்புறுதியை பெற்றுக்கொள்ள முன்னரே மருத்துவ செலவுகளுக்கான அத்தாட்சிகளையும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டுகளையும் வழங்கி CPAM நிறுவனத்திற்கு விண்ணப்பம் செய்யவும்.
- ✓ **நீங்கள் கட்டாயமாக ஒரு நிரந்தர முகவரி வழங்க வேண்டும்** அல்லது நிரந்தர முகவரி இல்லாத சந்தர்ப்பத்தில் உங்கள் கடிதங்களை பெற்றுக்கொள்வதற்காக ஒரு முகவரி பெற்றுக்கொள்ள ஒரு நிறுவனத்திடம் உடனடியாக விண்ணப்பிக்கவும்.

### எனக்கு வதிவிட அனுமதி இல்லை, நான் பிரான்சில் மூன்று மாதங்களுக்கு குறைவான காலமாக இருக்கின்றேன்

**எனது வைத்திய செலவுகட்கான பணத்தை நான் செலுத்த வேண்டும்.....**

ஆனால் நான் இலவசமாக சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும்:

- நான் கர்ப்பவதியாக இருந்தால் அல்லது அவசர சிகிச்சைகளுக்கு வைத்தியசாலையில், உதாரணமாக வைத்திய சிகிச்சை தேவைப்படும் காயங்கள், கடுமையான நோய், தொற்று நோய் (தோல் அரிப்பு, காச நோய்), நீண்டகால நோய் (சலரோகம்).
- முதலாம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களில்.

### எனக்கு வதிவிட அனுமதி இல்லை, நான் பிரான்சில் மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக இருக்கின்றேன்

**அரச வைத்திய உதவி (AME) பெற்றுக்கொள்ள நான் எனது விண்ணப்பத்தை CPAM இடம் சமர்ப்பிக்க வேண்டும்.**

நிபந்தனைகளை (குறைந்த வருமானம், மூன்று மாதங்களுக்கு மேலாக பிரான்சில் வசிப்பதற்கான அத்தாட்சிகள்) திருப்தி செய்தால் AME அட்டையை நான் பெற்றுக்கொண்டு இதனை சிகிச்சை பெறும் சந்தர்ப்பங்களில் (வைத்தியசாலையில், மருத்துவரிடம், மருந்துக்கள் பெற்றுக்கொள்ள சமர்ப்பித்தால் எனது வைத்திய செலவுகள் பொறுப்பேற்கப்படும். சில குறிப்பிட்ட மருந்துகள் (ஓரேன்ஞ் பட்டியலிலுள்ள) மற்றும் சில மருத்துவர்களிடம் ஒரு பகுதி கட்டணம் தவிர்ந்த ஏனைய வைத்தியங்களுக்கு நான் பணம் செலுத்த வேண்டியதில்லை.

ஆலோசனை பெற்றுக்கொள்ள முதலே கட்டணங்களை கேட்டு தெரிந்து கொள்ளவும்.

AME இலவசமானதும் ஒரு வருடத்திற்கு செல்லுபடியானதாகும்.

### நான் பிரான்சில் தற்காலிகமாக தங்கியுள்ளேன் (உதாரணம்: உல்லாச பிரயாண விசா)

**நான் எனது வைத்திய செலவுகள் எல்லாவற்றிற்கும் பணம் செலுத்த வேண்டும்.**

எனது வைத்திய செலவுகளை சில நிபந்தனைகளின் அடிப்படையில் பொறுப்பேற்று கொள்ளப்படுவதற்கு நான் பணம் செலுத்தும் தனியார் மருத்துவ காப்புறுதியை பெற்றுகொள்ள வேண்டும்.

### நான் வதிவிட அனுமதி வைத்துள்ளேன், நான் பிரான்சில் மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக இருக்கின்றேன்

**மருத்துவ காப்புறுதிக்கானதும் இலவசமானதும் மேலதிகமாதுமான காப்புறுதிக்கானதும் (CMU) விண்ணப்பத்தை CPAM இடம் விண்ணப்பிக்கின்றேன்.**

**எனது மருத்துவ காப்புறுதி மூலம்**

மருத்துவ காப்புறுதி: (attestations de droits)உரிமைகளுக்கான அத்தாட்சி பத்திரம் மற்றும் (carte vitale) என அழைக்கப்படும் அட்டையையும் நான் பெற்றுக்கொள்வேன். இதனை சிகிச்சை பெற்றுக்கொள்ளும் போது வழங்குவதன் மூலம் வைத்திய செலவின் ஒரு பகுதியை மீள பெற்றுக்கொள்ள முடியும். ஆலோசனை பெற்றுக்கொள்ள முதலே கட்டணங்களை கேட்டு தெரிந்து கொள்ளவும்.

**வைத்திய செலவுகளை முழுவதுமாக பொறுப்பேற்று கொள்ளபடுவதற்கு நான் மேலதிக காப்புறுதியை பயன்படுத்த முடியும்.:**

- ✓ மேலதிக காப்புறுதியை (CMU) பெற்றுக்கொள்ளுவதற்கு வேண்டிய நிபந்தனைகளை (குறைந்த வருமானம், மூன்று மாதங்களுக்கு மேலாக பிரான்சில் வசிப்பதற்கான அத்தாட்சிகள்) திருப்தி செய்யும் போது எனது மருத்துவ காப்புறுதி: உரிமைகளுக்கான அத்தாட்சி பத்திரம் மற்றும் carte vitale அட்டையும் மேம்படுத்தப்படும். எனது வைத்திய செலவுகள் முழுவதுமாக பொறுப்பேற்கப்படும். நான் எனது வைத்திய செலவுகட்கு பணம் செலுத்த வேண்டியதில்லை. மேலதிக காப்புறுதியானது (CMU) இலவசமானதும் ஒரு வருடத்திற்கு செல்லுபடியானதுமாகும்.
- ✓ எனது வருமானம் அதிகமானதாக இருந்தால், நான் பணம் செலுத்தும் மருத்துவ காப்புறுதியை (MUTUELLE) பெற்றுகொள்ள முடியும். இது எனது வைத்திய செலவுகளை எனது ஒப்பந்தத்திற்கு ஏற்ற வகையில் மீள வழங்கும்.

**நான் தொழில் புரிபவராக இருந்தால்; நான் அகதி அந்தஸ்து வின்னப்பித்தவர், அகதி அந்தஸ்து பெற்றவர், ஏற்கனவே மருத்துவ காப்புறுதி பெற்றுள்ள ஒருவரின் குடும்ப உறுப்பினர்.** நான் எனது மருத்துவ காப்புறுதியை நான் பிரான்சிற்கு வந்தவுடனேய, மூன்று மாதங்கள் காத்திருக்க முன்னரே, பயன் பெற்றுக்கொள்ள முடியும்.

CPAM இடம் உங்களது மருத்துவ காப்புறுதி விண்ணப்பம் செய்வதற்கு (நீங்கள் ஒரு பிரதியை வைத்திருக்க வேண்டும்)

- ✓ **பிரான்சில் வசிக்கும் உங்கள் பொறுப்பில் உள்ள குடும்ப உறுப்பினர்கள் அனைவரது விபரங்களையும் விண்ணப்பங்களில் தெரியப்படுத்த வேண்டும்.**
- ✓ நீங்கள் பிரான்சில் இருப்பதற்கான உங்கள் பெயர் திகதிகள் குறிப்பிடப்பட்டுள்ள அணைத்து ஆவணங்களையும் (வாடகை பற்றுசீட்டு, தொலைபேசி பற்றுசீட்டு, வைத்தியரின் மருந்து சீட்டு, அமைப்புகளின், பத்திரங்கள்) சமர்ப்பிக்க வேண்டும்.
- ✓ நீங்கள் ஏற்கனவே சிகிச்சை பெற்றிருந்தால் அல்லது பெற வேண்டியிருந்தால், வைத்திய செலவினங்களுக்கான பற்றுசீட்டுகளையும் வைத்திய அத்தாட்சி பத்திரங்களையும் உங்களது விண்ணப்பம் முன்னுரிமையாக பரிசீலிக்கப்படுவதற்காக சமர்ப்பிக்க வேண்டும்.